O.S. No: 55/2022

பெயர் :சண்முகம்

**வா.சா.1**

03-10-2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ள பாலசுப்ரமணியன் என் சித்தப்பா பையன் என்றால் ஆமாம் . வா.சா.ஆ.1 இல் 4 வது பக்கத்தில், கீழே இருந்து 3 வது பாராவில் , கீழ்காணும் A, B, C ஷெட்டியூல் சொத்திற்கு கீழ்புறமாக தெருமுதல் கொல்லை கடைசி வரை கீழமேல் 5 அடி அளவுள்ள பொதுபாதைவிடபட்டுள்ளதை நாமும் , நம் மூலமாக உரிமை கொண்டாட கூடியவர்களும் பொதுவில் அனுபவித்துக்கொள்ள வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . அதில் அடுத்த வரி மேற்படி பொது பாதையில் எந்தவிதமான ஆக்கரமிப்புகளும் ஏற்படுத்தாமலும் அடுத்த நபர்களின் பொது புழக்க உபயோகத்திற்கு யாதொரு தடையும் செய்யாமலும் நாம் பொதுவில் அனுபவித்துக்கொள்ள இதன் மூலமாய் ஒப்புக்கொள்கிறோம் என்று உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவத்தில் 18 வது பக்கத்தில், ஒரு மேப் போடப்பட்டு அதில் நாங்கள் அனைவரும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் ஆமாம் . வா.சா.ஆ.1 இல் யார் யாருக்கு எவ்வாறு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளதோ அவ்வாறு தான் மேப் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . மாடி படிக்கு மேலே முதல் தளம் எதுவும் கிடையாது என்றால் சரி . நான் கட்டிய வீட்டின் முதல் தளத்தை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்த பிறகு ஒரு வாரத்தில் முதல் தளத்தை நான் வாடகைக்கு விட்டிருக்கிறேன் என்றால் இல்லை . நான் சாட்சியமளித்துவிட்டு போனபிறகு முதல் தளத்தை வாடகைக்கு விட்டுவிட்டு தற்போது வழக்கிற்காக வாடகைக்கு விடவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . மொத்த சொத்திலும் கீழபுறம் 5 அடி பொது பாதையாக விட சம்மதித்து நானும் என் மகளும் பத்திர எழுத்தரிடம் சொல்லி பத்திரம் எழுத சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . கீழ் பகுதி சந்தில் அவரவர் இருக்கும் அமைப்புகளை அகற்ற ஒப்புக்கொண்டு தான் நான் இந்த பத்திரம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. உள்ளது உள்ளபடியே இருக்க வேண்டும் என்று தான் எழுதிக்கொண்டோம். உள்ளது உள்ளபடியே என்ற விவரம் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ பிராதிலோ இல்லை என்றால் சரியல்ல .

வா.சா.ஆ.1 ஆவணப்படி நிறைவேற்றக்கூடிய செயல் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணப்படி ஏற்கனவே பாகம் பிரித்துக்கொண்ட படியால் புதிதாக மீண்டும் பாகம் பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல . வா.சா.ஆ.1 ஆவணப்படி மொத்த விஸ்தீர்ணத்தில் பொதுவாக ஒதுக்கப்பட்ட இடத்தை தவிற எனக்கு அதிக அளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . சோமசுந்தரத்திற்கு தான் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது . வா.சா.ஆ.1 ஆவணத்தில் A ஷெட்டியூல் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . வா.சா.ஆ.1 இல் ஏ செட்டியூலாக 2106 சதுரடி எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி செட்டியூலாக 3 ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து 1165.5 என்றால் ஆமாம். சி செட்டியூலாக சோமசுந்தரத்திற்கும் அவருடைய அம்மாவிற்கும் இரண்டு அயிட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . அந்த 2 அயிட்டமும் ஒரே இடமாக சேர்ந்து இல்லை. அந்த 2 அயிட்டத்திற்கும் நடுவில் என் சொத்து உண்டு என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 நான் முன்னின்று தயார் செய்து பதிவு செய்த ஆவணம் என்றாலும் அதை சோமசுந்தரம் தயார்செய்யவில்லை என்றால் சரியல்ல . நானே முன்னின்று வீட்டை கட்டிவிட்டு தற்போது செல்வகணபதி இறந்துவிட்ட படியால் அவர் முன்னின்று கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . 1, 2 பிரதிவாதிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்வதால் பொறாமை கொண்டு நான் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . வா.சா.ஆ.1 ஆவணப்படி பாகம் பிரித்த பிறகு நான் சரியாக பிரிக்கவில்லை என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல . வா.சா.ஆ.1 பிரிவினைக்கு பிறகு நான் பொய்யான தகவலுடன் மற்றவர்களின் தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.